DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.113/2022 |
| Police Station | Manamadurai P.S |
| Deposition of Witness for | L.W.6/P.W.3 |
| Name | |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1,A2 absent.petition filed and allowed.A3, A4 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.03.2024 at 12.14p.m

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 அழகுசுந்தரம் எனக்க தெரியும். 03.05.2018ம் தேதி சித்திரை திருவிழா நிலாச்சோறு திருவிழாவிற்காக மானாமதுரை வந்தேன். நிகழ்ச்சி முடிந்த பின்பு 02.05.2018 இரவு 1 மணியளவில் புதுார் பழைய பேருந்து நிலையம் வழியாக பேருந்து நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது பழைய பேருந்து நிலையத்தில் பணியில் இருந்த சிப்காட் காவல் நிலைய முதல் நிலைய காவலர் அழகுசுந்தரம் என்பவரை பாரதி என்பவர் உருட்டைகட்டையால் தலையில் அடித்தார். மற்ற எதிரிகள் அழகுசுந்தரத்தை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அழகுசுந்தரத்திற்கு தலையில் ரத்தம் வடிந்தது. காயம்பட்ட அழகுசுந்தரத்தை 108 ஆம்புலன்ஸ் மூலம் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்த்த விசயமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். காவல் ஆய்வாளரிடம் நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**